# மருத்துவக் காப்பீட்டின் தகுதி தொடர்பாக கியூபெக்கில் தங்கியிருத்தல்

கியூபெக்கில், மருத்துவக் காப்பீட்டுக் கழகம், கார்டுதாரர் கட்டணம் செலுத்தாது அவருக்கு பல்வேறு உடல்நலச் சேவைகளை அளிக்கின்றது. ஆனால் இந்த சேவைகளிற்கான தகுதியை தக்கவைக்க நீங்கள் சில நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டு இருக்க வேண்டும் என்பது உங்களுக்கு தெரியுமா? நீங்கள் கியூபெக்கின் குடியுரிமை பெற்றிருப்பது மட்டுமின்றி, இங்கே தங்கியிருத்தலும் வேண்டும். கியூபெக்கின் மருத்துவக் காப்பீட்டுக் கழகம் இதற்கான சோதனைகளை மேற்கொள்கிறது

### கண்காணிக்கப்பட வேண்டிய விதி

**காப்பீட்டின் முதல் 12 மாதங்களின் போது,** கியூபெக்கில் இல்லாது இருத்தலிற்கான நாட்களின் எண்ணிக்கை 183 – ஐ விட குறைவாக இருத்தல் வேண்டும்.

**அதன் பிறகு,** கியூபெக்கில் இல்லாது இருத்தலிற்கான நாட்களின் எண்ணிக்கை 183 – ஐ விட குறைவாக இருப்பதற்கான கால வேளை ஒரு காலண்டர் வருடமாகிறது. அதாவது, ஜனவரி 1 மற்றும் டிசம்பர் 31 ற்கு இடையே உங்களின் இல்லாமை.

இரண்டு நிலைமைகளிலும், 21 நாட்களுக்குள்ளாக கியூபெக்கை விட்டு வெளியே சென்றிருப்பது கணக்கில் எடுத்துக் கொள்ளப்பட மாட்டாது

**இல்லாதிருக்கும் நாட்கள் எப்படி கணக்கிடப்படுகிறது என்பதற்கான உதாரணம்**

நீங்கள் கடந்த நான்கு வருடங்களாக மருத்துவக் காப்பீட்டைக் கொண்டிருக்கிறீர்கள் எனவும் ஒரு குறிப்பிட்ட வருடத்தில், ஜனவரி 1 மற்றும் டிசம்பர் 31 ற்கு இடையே நீங்கள் மூன்று வேளைகளில் கியூபெக்கை விட்டு வெளியே சென்றிருந்தீர்கள் எனக் கொள்வேம்.

- ஸ்பெயினிற்கு மார்ச் 4 ஆம் தேதி புறப்பட்டு ஆகஸ்டு 7 ஆம் தேதி திரும்புதல்: கழகம் கியூபெக்கில் உங்களின் இல்லாமையை 155 நாளாக கணக்கிடும். அதாவது, மார்ச் 5 லிருந்து ஆகஸ்டு 6 வரை இரண்டு நாட்களும் அடங்கியதாக
- அல்பர்டாவிற்கு செப்டெம்பர் 1ஆம் தேதி புறப்பட்டு நவம்பர் 4 ஆம் தேதி திரும்புதல்: கழகம் கியூபெக்கில் உங்களின் இல்லாமையை 63 நாளாக கணக்கிடும். அதாவது, செப்டெபம்பர் 2 லிருந்து நவம்பர் 3 வரை இரண்டு நாட்களும் அடங்கியதாக
- மெக்சிகோவிற்கு டிசம்பர் 20ஆம் தேதி புறப்பட்டு டிசம்பர் 27 ஆம் தேதி திரும்புதல்: கழகம் கியூபெக்கில் உங்களின் இல்லாமையை 0 நாளாக கணக்கிடும் ஏனெனில், 21 நாளிற்கு குறைவான இல்லாமைகளை வாரியம் கணக்கில் எடுத்துக்கொள்வதில்லை.

| **கியூபெக்கிற்கு வெளியேயான உங்களது தங்கியிருத்தல்** | **மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் கீழ் உங்களுக்கு அளிக்கப்படும் காப்பீட்டிற்கு கருதப்படும் நாட்களின் எண்ணிக்கை** |
|---|---|
| ஸ்பெயினில் 155 நாட்கள் | 155 நாட்கள் |
| அல்பர்டாவில் 63 நாட்கள் | 63 நாட்கள் |
| மெக்சிகோவில் 6 நாட்கள் | 0 நாட்கள் |
| | மொத்தம் **:** 224 நாட்கள் |

இந்த குறிப்பிட்ட வருடத்திற்கு, கழகம் 224 நாட்கள் நீங்கள் கியூபெக்கிலிருந்து வெளியே சென்றிருந்ததாக எடுத்துக் கொள்ளும். இதன் விளைவாக, நீங்கள் இந்த முழு வருடத்திற்கான காபீட்டை முழுவதுமாக இழக்கிறீர்கள் இந்த முழு வருடத்தில் நீங்கள் பெற்றிருந்த மருத்துவக் காபீட்டை கழகத்திற்கு திருப்பியளிக்க வேண்டும்.

**எதிர்பார்ப்புகள்**

காப்பீட்டின் முதல் 12 மாதங்கள் நிறைவு பெற்றவுடன், மேற்கண்ட விதிகளில் விலக்கு பொருந்தும். உதாரணத்திற்கு, 183 அல்லது அதற்கு மேலான நாட்கள் இல்லாதிருப்பினும், நீங்கள் கல்வி, பயிற்சி எடுத்தல் அல்லது பணி காரணமாக கியூபெக்கை விட்டு வெளியே சென்றிருப்பின், நீங்கள் மருத்துவக் காப்பீட்டிற்கு தகுதி பெற்றிருப்பீர்கள். கூடுதலாக, ஏழு வருடங்களிற்கு ஒரு முறை நீங்கள் காலண்டர் வருடத்தில் 183 நாட்கள் அல்லது அதற்கு அதிகமாக இல்லாதிருப்பினும், நீங்கள் மருத்துவ காப்பீட்டிற்கு தகுதி பெற்றிருப்பீர்கள்.

விதிவிலக்கான நிலைகளைப் பற்றி கூடுதலான தகவல் அறிய எங்கள் இணையதளத்தைக் காணவும் அல்லது எங்களை தொலைபேசியில் அழைக்கவும்

**உங்கள் கடமைகள்**

- நீங்கள் ஒரு குறிப்பிட்ட வருடத்தில் மொத்தமாக 183 அல்லது அதற்கு மேலான நாட்கள் கியூபெக்கை விட்டு வெளியே தங்க வேண்டியிருப்பின் அதனை கழகத்திற்கு தெரிவிக்க வேண்டும் (நீங்கள் புறப்படுவதற்கு முன்னர் கழகத்தோடு தொடர்பு கொள்ள வேண்டும்- இவ்வாறு செய்வதனால் நீங்கள் மருத்துவக் காப்பீட்டு திட்டத்தின் காப்பீட்டிற்குள் இருக்கிறீர்களா என்பது உங்களுக்கு தெரியும்).
- உங்கள் முகவரி மாறின், அல்லது நீங்கள் கியூபெக்கை விட்டு வெளியே செல்கிறீர்களா இல்லையா என்பதைப் பற்றியும் நீங்கள் தெரிவிக்க வேண்டும்.

**கூடுதலான தகவலிற்காக**

எங்கள் இணையதளம் **www.ramq.gouv.qc.ca** -ஐ காணவும்

நீங்கள் தகவல்களை தொலைபேசி மூலமாகவும் பெறலாம்.

**கியூபெக்கில்**
**418 646-4636**

**மோன்ட்ரியலில்**
**514 864-3411**

**கியூபெக்கில் வேறு இடத்தில்**
**1 800 561-9749**

**TDD மூலமாக (காது கேளாதோருக்கான கருவி)**
**418 682-3939 (கியூபெக்கில்)**
**1 800 361-3939 (கியூபெக்கில் வேறு இடத்தில்)**

**தபால் மூலமாக**

கியூபெக் மருத்துவக் காப்பீட்டுக் கழகம்
தபால் பெட்டி 6600
கியூபெக் G1K 7T3

Régie de l'assurance maladjie du Québec
Case postale 6600
Québec (Québec) G1K 7T3

**அலுவல் நேரம்**
திங்கள், செவ்வாய், வியாழன் மற்றும் வெள்ளி: காலை 8.30 முதல் மாலை 4.30 வரை
புதன் கிழமை: காலை 10.00 முதல் மாலை 4.30 வரை

அலுவல் நேரம் அப்பாற்பட்டு பிற நேரங்களில் எங்களது அலுவலக தொலைபேசி உங்களை தானியங்கி தகவல் தொடர்போடு இணைக்கும்